Pensions

*** 198 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்களின் பென்ஷன் திட்டம் மேலும் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறதா ?

(இ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

(உ) இது சம்பந்தமாய் ஆசிரியர்களின் பிராவிடெண்டு, இன்ஷூரன்ஸ், பென்ஷன் விதிகள் திருத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா ?

(எ) அதன் விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) to (*d*) A scheme of grant of pension to teachers in elementary schools and certain categories of teachers in secondary schools was sanctioned with effect from 1st April 1955. In 1958, this scheme was extended to L.T. teachers and other teachers in secondary schools including post-basic schools, Special schools, training schools and Anglo-Indian schools. The Provident Fund Insurance Rules, etc., have been suitably amended to give effect to the decision to extend the scheme to all teachers in secondary schools.

SRI A. VEDARATHNAM : இந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு, ப்ராவிடெண்ட் பண்ட், இன்ஷூரன்ஸ், பென்ஷன் முதலியவற்றில், இந்த ப்ராவிடெண்ட் பண்ட் கட்டாயமாக இருக்கிறதா, இல்லை இஷ்டம்போல் செய்யலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கட்டாயம்.

*** 199 Q.—SRI M. P. SARATHI :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ஊழியர்களின் கான்ட்ரிபூடரி பிராவிடெண்டு பண்டு-பென்ஷன் விதி முறைகள் மாற்றப்பட்டுள்ளனவா ?

(இ) அப்படியானால், எத்தகைய மாற்றம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) : The Madras Contributory Provident Fund-Pension Insurance Rules, 1950, were cancelled with effect from 1st July 1960 in their application to all non-industrial employees of the State Government.

Loud speaker

* 200 Q.—SRI A. A. RASHEED :
SRI T. T. DANIEL : } Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to put an end to the loud speaker nuisance in the City?